## ஸ்பெயின் மற்றும் மொரோக்கோவின் கட்டிடக்கலை மற்றும் கட்டிடங்கள்

உந்துலுஸ் எனப்படும் ஸ்பெயின் நாட்டில் முஸ்லிம்களிடையே கட்டிடக் கலையின் மேம்பாட்டின் காலம் ஏறத்தாழ ஏழு நூற்றாண்டுகள் வரை தொடர்ந்தது. இது எட்டாம் நூற்றாண்டில் ஃகுர்துபா (கார்டோவா)வின் ஜாமிஆ மஸ்ஜிதின் கட்டுமானப்பணி துவங்கியது முதற்கொண்டு பதினைந் தாம் நூற்றாண்டில் கிரானாடாவில் ஃகஸ்ருல் ஹம்ரா எனப்படும் சிகப்பு மாளிகை கட்டி முடிக்கப்பட்ட காலம் வரை தொடர்ந்தது. இக்காலக்கட் டத்தில் நூற்றுக்கணக்கான கட்டிடங்கள், உதாரணமாக, குளியலறைகள், மாளிகைகள், மஸ்ஜிதுகள், கல்லறைகள், கல்விக்கூடங்கள், பாடசாலைகள் மற்றும் பாலங்கள் ஆகியன கட்டப்பட்டுள்ளன. இவற்றைப்பற்றிய விவரங் கள் எழுதப்படவேண்டுமானால் ஒரு மிகப்பெரிய நூலாகவே அகிவிடும்.

உந்துலுஸ் எனப்படும் ஸ்பெயின் நாட்டில் முஸ்லிம்களிடையே கட்டிடக் கலையினனைப்பற்றி நூல்களில் படித்துப் பார்க்கும்போது அங்கிருந்த முஸ்லிம் அரசர்கள் மற்றும் குடிமக்களில் பெரும்பாலானோர் பழங்காலக் காலாச்சார மரபுகளைப் பின்பற்றுவது மற்றும் கடைபிடிப்பதை விரும்ப வில்லை, மாறாக, அங்கே ஒரு புதிய நாகரீகம் மற்றும் கலாச்சாப் பண்பு கள் வடிவெடுக்கவேண்டும் என்றே கருதினர் என்பதை நாம் மனதில் கொள்ளவேண்டும். இதன் காரணமாக, ஒரு புதிய சமுதாயமே உருவாகி விட்டது. இந்தப் புதிய கலாச்சாரம் மற்றும் மரபுவழியின் மூலம் அவர்க ளுடைய கட்டடிடக்கலையில் ஒரு புதிய அணுகுமுறை மற்றும் நயம் பிரதி பலித்தது. உந்துலுஸ் (ஸ்பெயின்) நாட்டின் சில மறக்க முடியாத, அக்கா லத்துச் சின்னங்களாக விளங்கும் கட்டிடங்கள் கீழ்வருமாறு:

www.uzaifahani.com

### கார்டோவா ஜாமிஆ மஸ்ஜித்

இந்த பள்ளிவாசலைக்கட்டும் எண்ணம் அமீர் முதலாம் அப்துர் ரஹ்மான் எனும் அப்துர் ரஹ்மான் அத்தாக்ஹில் (ஹிஜ்ரி 756-788) அவர்களுக்கு உள் நாட்டுக் கலவரங்களைக் கட்டக்குள் கொண்டுவந்துவிட்டபின்பு மற்றும் அந்நிய நாடுகளின் ஆக்கிரமிப்பு அல்லது படையெடுப்பின் அச்சமே இல் லாத வகையில் பாதகாப்பு ஏற்பாடுகள் செய்துவிட்டபின் தோன்றியது. அவர் தன்னுடைய மறைவுக்கு இரண்டு ஆண்டு காலத்திற்கு முன்பே இப் பணியினைத் துவக்கினார். அமீர் முதலாம் அப்துர் ரஹ்மான் அவர்கள் இந்த மஸ்ஜிதை டமஸ்கசிலுள்ள உமவி ஜாமிஆ மஸ்ஜிதைப்போன்றே கம்பீரமானதாகக் கட்டி உந்துலுஸ் மற்றும் மொரோக்கோ நாட்டு மக்க ளுக்கு ஒரு புதிய கலாச்சார மையத்தினை அமைத்துத் தரவேண்டும் என்று விரும்பினார். இதன் காரணமாகவே, அவர் இதன் கட்டுமானப்பணி களைத் தாமே மேற்பார்வை செய்துவந்தார்.

பள்ளிவாசலின்புற மதிற்சுவர் எந்தஅளவிற்கு உயரமானதாகவும் வலுவான தாகவும் இருந்தது என்றால், அது ஒரு நகரத்தின் மதிற்சுவரைப்போன்று காணப்பட்டது. மஸ்ஜிதுடைய கூரை எண்ணற்ற தூண்களின்மீது அமைக் கப்பட்டிருந்தது. அவற்றின்வரிசையானஅமைப்பு குறுக்கேசந்திக்கும் வகை யிலானதாக உள்ளதால், இருபுறங்களில் இணையான பாதைகளாக அமைந்தன. தூண்களின்மீது அலங்கார வேலைப்பாட்டுடனான குதிரை வளைவுகள் அமைக்கப்பட்டிருந்தன. இந்த குதிரை வளைவுகள் இந்தக் கம்பீரமான மஸ்ஜிதுடைய தனிச்சிறப்பிற்குக் காரணமாக இருந்ததோ டல்லாமல், அது ஸ்பெயின் கலாச்சாரத்தின் கட்டிடக்கலையின் சின்ன மாகவும் அமைந்தது. கார்டோவா ஜாமிஆ மஸ்ஜிதில் தூண்களின்மீது இரட்டை மிஹ்ராபுகள்அமைக்கப்பட்டுள்ளன. அதாவது, ஒரு மிஹ்ராபின் மீது மற்றொன்றை அமைத்து அது கூரையைத் தொடும் வகையில் கட்டப் பட்டுள்ளன. இந்த மிஹ்ராபுகளின்மிது ஆங்காங்கே குவிமாடங்கள் அமைக்கப்பட்டன, அவற்றுள் சில இன்றும் நிலைத்திருக்கின்றன. கூரை தரையிலிருந்து முப்பது அடி உயராமானதாக இருந்தது, இதன் காரண மாக, மஸ்ஜிதுக்குள் காற்று மற்றும் ஒளி பெறப்படுவது எளிதானதாக இருந்தது. கூரையின்மீது இரு நூற்று எண்பது மின்னும் நட்சத்திரங்கள் அமைக்கப்பட்டிருந்தன, அவற்றுள் உட்புறமான நட்சத்திரங்கள் வெள்ளி யினாலானவையாகும். அத்துடன், கூரை மரச்சட்டங்களினால் அலங்கரிக் கப்பட்டிருந்தது, ஒவ்வொரு சட்டத்தின்மீதும் அலங்காரப் பூவேலைகள் ஒன்றுக்கொன்று வேறுபட்டுக் காணப்பட்டன. மஸ்ஜிதின் மையப்பகுதி யில் செப்பினாலான ஒரு பெரிய மரம் தொங்கவிடப்பட்டிருந்தது. அதில் ஒரு சமயத்தில் ஆயிரம் விளக்குகள் எரியும் வசதி செய்யப்பட்டிருந்தது. அங்கேஅமைக்கப்பட்டிருந்தகூடங்களின் கதவுகளின்மீது பொன் வேலைப் பாடு செய்யப்பட்டிருந்தது. மிஹ்ராப் மற்றும் அதனை ஒட்டிய சுவர் தங்கத்தினாலானது. பளிங்குக் கற்களினாலான தூண்களிமீது பொன் அலங்கார வேலைப்பாடுகளால் மிகத்துல்லியமாக அழகுபடுத்தப்பட்டி ருந்தது.

அப்துல் ரஹ்மான் அத்தாக்ஹில்ஆட்சிக்குப்பின் அமீர்முதலாம் ஹிஷ்ஷாம் (ஹிஜ்ரி 788-796) அமீராகப் பதவியேற்றார். அவரும் இந்த மஸ்ஜிதுடைய கட்டிடப்பணிகளைத் தொடர்ந்து மேற்கொண்டார். அவர் தன்னுடைய ஏழு ஆண்டு ஆட்சிக்காலத்தில் போர்ப்பொருட்களுக்காகவும் மற்ற வருமானங் களின் ஐந்தில் ஒரு பங்கினை பள்ளிவாசல் கட்டிடப்பணிகளுக்காகச் செலவு செய்தார். இந்த கம்பீரமான மஸ்ஜிதுடைய சதுர வடிவிலான மிகப்பெரிய மீனார் அவருடைய காலத்தில்தான் கட்டப்பட்டது. இந்த மீனார் உலக அதிசயங்களில் ஒன்றாகக் கருதப்பட்டது.

www.uzairfalahi.com

உண்மை என்னவெனில், இந்தத் தனிச்சிறப்பு வாய்ந்த அக்காலக்கட்டத்தின் அற்புதமான பள்ளிவாசல் கட்டிமுடிப்பதில் மாதங்களும் ஆண்டுகளுமல்ல, நூற்றாண்டுகள் ஆயின. ஒவ்வொரு ஆட்சியாளரும் அமீரும் தன்னுடைய நிதி ஆதாரங்கள் மற்றும் அவர்களுடைய கட்டிடக்கலை ஆர்வத்தின் அடிப்படையில் எவ்விதக் கட்டுப்பாடுமின்றி செலவு செய்துள்ளனர். ஆயிரக்கணக்கான பணியாளர்கள், நூற்றுக்கணக்கான கட்டிடப்பணியாளர்களுடன் சேர்ந்து இந்தப் பள்ளிவாசலின் கட்டிடப்பணி மற்றும் அலங்கார வேலைப்பாடுகளில் தங்களுடைய கடுமையான உழைப்பின் மூலம் வியர்வையைச் சிந்தியுள்ளார்கள். இதன் பலனாகவே, இந்த மகத்தான கட்டிடப் பணி முடிக்கப்பட்டு விரல்விட்டு எண்ணும் வகையிலான தனிச்சிறப்பும் அந்தஸ்தும் இந்த மஸ்ஜிதிக்குக் கிடைத்துள்ளது.

## மதீனதுஜ்ஸஹ்ரா நகரத்தின் கட்டமைப்பு

இந்த நகரத்தை ஆட்சியாளரான அப்துர் ரஹ்மான் நாஸிர் ஹிஜ்ரி 325 ஆம் ஆண்டில் கட்டி முடித்தார். இவர் இதனைக் கட்டுவதற்காக அப்பிரிக்கா, ரோம் மற்றும் ஃகுஸ்தன்தூனியாவிலிருந்து பளிங்குக் கற்களை இறக்குமதி செய்தார். இந்த நகரத்தில் ஃகஸரு மு்ஃனிஸ் மாளிகையைக் கட்டினார், அதனுடைய நீர்த்தேக்கம் பளிங்குக் கற்களினாலானது. அதனுள் ஒரு உயிருள்ள பிராணியின் படம் வரையப்பட்டிருந்தது, இது இஸ்லாத்தின் கொள்கையின் அடிப்படையில் தடுக்கப்பட்டதாகும்.

இவ்வகையில், இவர் இதனைக் கட்டமைப்பதற்காக கோடிக்கணக்கில் பணத்தைச் செலவு செய்தார், இதனுடைய கட்டுமானப்பணி நாற்பது ஆண்டுகள்வரை தொடர்ந்தது, இதில் இருபத்தைந்து ஆண்டுகள் இவருடைய வாழ்நாளிலும், பதினைந்து அண்டுகள் இவருடைய மறைவுக்குப் பின்பும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டது. ஒவ்வொரு நாளும் பத்தாயிரம் வேலையாட்கள் வேலை செய்துவந்தனர். இதில் ஆட்சியாளர்களுக்காகவும், அரசு குடும்பத்தினருக்காகவும் பெரிய மாளிகைகள் கட்டப்பட்டன, பணியார்களுக்காவும் விடுகள் மற்றும் அரசு அலுவலகங்கள் கட்டப்பட்டன. இந்நகரத்தில் ஒரு உயிரியல் பூங்காவும் இருந்தது. அங்கே பல்வேறு வகையான பறவைகள் மற்றும் விலங்குகள் சுற்றித்திரிந்துகொண்டிருந்தன. இந்தக்காட்சியைக் காண்பதற்காவும் சுற்றுலாவாகவும் மக்கள் அங்கே வருகை தந்துகொண்டிரைுந்தனர்.

மதீனது ஜ்ஸஹ்ராவின் கட்டுமானப்பணி முடிவடைந்தபின் மக்கள் ஆட்சியாளரான க்ஹலீஃபாவிற்கு நல்வாழ்த்துக்களைத் தெரிவித்தனர். அது வெள்ளிக்கிழமையாக இருந்தது, பள்ளிவாசலில் அனைவரும் கூடியிருந்தனர். ஃகாஜி முன்த்ஜிர் அவர்கள் க்ஹுத்பா உரை நிகழ்த்தினார்கள்,

www.uzairfalahi.com

அந்தக் க்ஹுத்பா உரையில் ஆட்சியாளரான அப்துர் ரஹமான் பணத்தை வீண் விரயம் செய்துள்ளதைக் கண்டனம் செய்தார்கள் மற்றும் அவரைக் கடுமையாக விமர்சித்தார்கள். ஃகாஜ்தி முன்த்ஜிர் அவர்கள் மிகவும் தைரியமுள்ள ஃகாஜ்தியாக இருந்தார்கள். அவர்கள் உண்மையை எடுத்துரைப்பதில் தயக்கமோ அச்சமோ கொள்வதில்லை. அப்துர் ரஹமான் தானும் ஒரு நீதியாளராக இருந்தார், அவர் ஃகாஜ்தி முன்த்ஜிர் போன்ற ஒரு அறிஞரை அவர் நீதி மற்றும் நியாயமாகச் செயல்படுவதில் யாருடைய பயமுமின்றி செயல்படவேண்டும் என்பதற்காவே நியமித்தார். ஆகவே, அவர் ஃகாஜ்தி முன்த்ஜிர் அவர்கள் கூறியவற்றை பொறுமையுடன் கேட்டார், தன்னுடைய தவறை ஒப்புக்கொண்டார் மற்றும் அழத்துவங்கினார்.

## ஃகஸருல் ஹம்ராவின் கட்டமைப்பு

கட்டிடக்கலையின் வரலாற்றில் கிரானாடாவின் சுல்தான்கள் மற்றும் கிரானாடாவின் கட்டிடக்கலைப் பணியாளர்களின் மகத்தான ஞாபகச் சின்னமாக அமைவது ஃகஸருல் ஹம்ராவாகும். இந்த மாளிகை மற்றும் அதன் அழகான தோட்டங்கள் ஜன்னதுல் மஃஆரிஃப் என்றழைக்கப்பட்டன, இவை உந்துலுஸ் முஸ்லிம்களின் கட்டிடக்கலையின் சிறப்புமிக்க அடையாளமும் சின்னமுமாகும். இந்தியாவின் பழமையான கட்டிடங்களில் தாஜ்மஹாலுக்கு உள்ள அந்தஸ்து இங்கே உந்துலுசின் ஃகஸரு ஹம்ராவுக்கும் உள்ளது. இதனைக் கண்டு மகிழ்வதற்காக இன்றும் உலகெங்கிலிருந்தும் சுற்றுலாப் பயணிகள் வருகை தருகின்றனர் மற்றும் அதனைக் கட்டிய கட்டிடக்கலை வல்லுநர்கள் மற்றும் பணியாளர்களைப் புகழ்ந்து பாராட்டியவர்களாகத் திரும்பிச் செல்கின்றனர்.

மேற்காசிய நாடுகளில் (மங்க்ரிப்) முக்கியமான கட்டிடக்கலை வளர்ச்சி கண்ட மையங்களாவன: இஷ்பீலிய்யா, மொரரோக்கோ, கிரானாடா, பாரசீகம், அத்துடன் மேற்காசிய நாடுகளில் இஸ்லாமிகக் கலாச்சாரத்தின் எண்ணற்ற வரலாற்றுச் சின்னங்கள் மற்றும் மாடமாளிகைகளும் கட்டிடங்களும் உள்ளன.

## ஃபாதிமியர்கள் ஆட்சிக்காலத்தில் கட்டிடக்கலை மற்றும் கட்டிடங்கள்

ஃபாதிமியர்களும் எண்ணற்ற வரலாற்றுச் சின்னங்களை விட்டுச்சென்றுள்ளனர், அவற்றுள் சில கீழ்வருமாறு:

### கெய்ரோ நகரத்தின் கட்டமைப்பு

ஜவ்ஹர் அத்ஸ்ஸஃகலி ஹிஜ்ரி 385 ஆம் அண்டு ஃபுஸ்த்தாத் நகரத்தைக் கைப்பற்றியபோது அவர் கெய்ரோ நகரத்தை நிர்மாணித்துக் கட்டமைக்கும் திட்டத்தினைத் தீட்டினார். இதனுடைய வரைவு முதலில் சதுர வடிவ

www.uzairfalahi.com

மானாதாக இருந்தது மற்றும் அதற்காக நிர்ணயிக்கப்பட்ட பரப்பளவு 1340 ஏக்கர். நகரத்தின் மதில் சுவர்கள் செங்கற்களால் கட்டப்பட்டன. நகரத்தின் மத்தியில் இரண்டு மாளிகைகள் கட்டப்பட்டன, அவற்றுள் மேற்குப் பகுதியில் ஒரு பெரிய மாளிகையும் கிழக்குப்பகுதியில் சிறிய மாளிகையும் இருந்தது. இந்த இரண்டு மாளிகைகளுக்ககுமிடையில் இராணுவ அணிவகுப்புப்பயிற்சிக்கான பெரிய மைதானம் இருந்தது. இதுவே ஃபாதிமியர்களுடைய ஆட்சியின் தலைநகராக இருந்தது. நகரத்தின் மதிற்சுவர்களில் எண்ணற்ற இரும்புக் கதவுகள் பொருத்தப்பட்டிருந்தன, அவற்றுள் இரண்டு கதவுகள் இன்றும் நிலைத்திருக்கின்றன. இந்த நகரம் ஃபாதிமிய சுல்தான்களின் போர்க்காலக் கட்டிடக் கலையின் முக்கியமான வரலாற்றுச் சின்னங்களாகும்.

## ஜாமிஃஉல் அஜ்ஸ்ஹர்

கெய்ரோ நகரத்திலுள்ள இந்த மஸ்ஜித் ஹிஜ்ரி 263-265 ஆண்டுகளுக்கிடையிலான காலக்கட்டத்தில் கட்டி முடிக்கப்பட்டது. ஆனால், அதன் மினாரா ஹிஜ்ரி 696 ஆம் ஆண்டில்தான் கட்டப்பட்டது. இந்த மஸ்ஜித் எகிப்து மற்றும் இஸ்லாமிய உலகில் முஸ்லிம்களின் கட்டிடக்கலையின் ஒரு முக்கிய வரலாற்றுச் சின்னமாகும்.

## ஃபாதிமியர்களின் மாளிகைகள்

ஃபாதிமிய சுல்தான்கள் எண்ணற்ற மாளிகைகளைக் கட்டியுள்ளனர், அவற்றுள் சில முக்கியமாவை கீழ்வருமாறு:

### கிழக்குப் பகுதியிலுள்ள மாளிகை:

இந்த மாளிகையை ஜவ்ஹர் அத்ஸ்ஸஃகலி ஃபாதிமிய அரசர் அல்முஃஇஸ் அவர்களுக்காகக் கட்டினார். இதன் காரணமாகவே, இந்த மாளிகை அல் முஃஅஜ்ஸி என்றும் அழைக்கப்படுகின்றது. இந்த மஸ்ஜிதில் நான்காயிரம் அறைகளும் எண்ணற்ற கதவுகளும் இருப்பது பிரபலமான ஒரு விஷயமாகும்.

### மேற்குப் பகுதியிலுள்ள மாளிகை:

இதனை அக்காலத்து ஆட்சியாளரான அல் அஜ்ஸீஸ் பில்லாஹ் கட்டி முடித்தார்.

இவ்வகையில், ஃபாதிமியர்களும் மாளிகைகளைக் கட்டுவதில் பெருமளவில் பணத்தைச் செலவு செய்துள்ளனர் என்பது நமக்குத் தெரியவருகின்றது.

* * *

www.uzairfalahi.com